






க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான,

# பாரதியார் பாடல்கள்

- குயிற்பாட்டு
- கண்ணம்மா என் காதலி
- பாஞ்சாலி சபதம்
- பெண் விடுதலை











# தமிழ்

தொகுப்பு..

ஆசிரியர் திரு. இ. அநூஷன்[National Dip.in.Teach]

(தொடர்புகளுக்கு 077-4323124)



## சின்னசுவாமி சுப்பிரமணிய பாரதி.

**சின்னசாமி ஐயர் இலக்குமி** அம்மாள் தம்பதியினருக்கு **திசம்பர் 11, 1882ல்** தமிழ்நாட்டின் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள அன்றைய ) (திருநெல்வேலி மாவட்டம்**எட்டயபுரத்தில்** பாரதியார் பிறந்தார் . இவரின்**இயற்பெயர் சுப்பிரமணியன்** என்றாலும், **சுப்பையா** என்று அழைக்கப்பட்டார் **1887ஆம் ஆண்டு இலக்குமி அம்மாள் மறைந்தார் .** அதனால், பாரதியார் அவரது **பாட்டியான பாகீரதி அம்மாளிடம் வளர்ந்தார்.**

தனது **பதினொன்றாம் வயதில் பள்ளியில் படித்து வரும்பொழுதே கவி புனையும் ஆற்றலை** வெளிப்படுத்தினார். **1897 ஆம் ஆண்டு செல்லம்மாளை மணந்தார்** .1898 ஆம் ஆண்டு தொழிலில் ஏற்பட்ட நட்டத்தினால் வறுமை நிலையினை அடைந்தார்இதனை எட்டயபுரம் மன .னருக்குத் தெரிவித்து பொருளுதவி வழங்குமாறு கடிதத்தில் கேட்டுக்கொண்டார்பின்னர் எட்டையபுரம் . சில காலத்திலேயே .அரண்மனையில் பணி கிடைத்தது, அப்பணியை விடுத்து காசிக்குச் சென்றார் . 1898 முதல் 1902 வரை அங்கு தங்கி இருந்தார்பின்னர் எட்டயபுரத்தின் மன்னரால் அழைத்த .ு வரப்பட்டு அரண்மனை ஒன்றினில் பாரதி வாழ்ந்தார் **.ஏழு ஆண்டுகள் பாட்டெழுதாமல்** இருந்தபின்னர், **1904** ஆம் ஆண்டு மதுரையில் பாரதி எழுதிய பாடல் **"விவேகபானு"** இதழில் வெளியானது **.வாழ்நாள் முழுதும் பல்வேறு காலகட்டங்களில் இதழாசிரியராகவும் மதுரையில் சேதுபதி மேல்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகவும்** பணியாற்றினார்.



பாரதி, **தமிழ், ஆங்கிலம், இந்தி, சமற்கிருதம், வங்காள மொழி** ஆகியவற்றில் புலமை பெற்றவர் **.பிற மொழி இலக்கியங்களை மொழி பெயர்க்கவும்** செய்துள்ளார். ஒரு **கவிஞர், எழுத்தாளர், பத்திரிக்கையாசிரியர், விடுதலை வீரர் மற்றும் சமூக சீர்திருத்தவாதி** ஆவார் இவரை **.பாரதியார்** என்றும் **மகாகவி** என்றும் அழைக்கின்றனர்பாரதி ., **தமிழ் கவிதையிலும் உரைநடையிலும் சிறப்பான புலமை** கொண்டு, **நவீன தமிழ் கவிதைக்கு முன்னோடியாகத்** திகழ்ந்தார் **தமிழ், தமிழர் நலன், இந்திய விடுதலை, பெண் விடுதலை, சாதி மறுப்பு, பல்வேறு சமயங்கள்** குறித்து கவிதைகளும் கட்டுரைகளும் எழுதியுள்ளார் தம் **.எழுத்துகள் மூலமாக மக்கள் மனதில் விடுதலை உணர்வை ஊட்டி**யவர் **.எட்டப்ப நாயக்கர் மன்னர்** இவருடைய **கவித்திறனை** மெச்சி **பாரதி** என்ற பட்டம் வழங்கினார் **.பாரதியாரின் நூல்கள் தமிழ்நாடு மாநில அரசினால் 1949 ஆம் ஆன்டில் நாட்டுடைமை** ஆக்கப்பட்டன **.இந்தியாவிலேயே** முதன்முதலாக **நாட்டுடைமையாக்கப்பட்ட இலக்கியம் பாரதியாருடையதாகும்.** தாய்மொழியாம் **தமிழ்மொழி மீது அளவுகடந்த பற்று**க்கொண்ட இவர் **"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்"** என்று போற்றியுள்ளார்.

விடுதலைப் போராட்ட காலத்தில், இவருடைய தேசிய உணர்வுள்ள பல்வேறு கவிதைகள் மக்களை ஒருங்கிணைத்த காரணத்தினால் **“தேசிய கவியாக”** போற்றப்பட்ட மாபெரும் புரட்சி வீரன். பாரதி, **இந்திய வரலாற்றின் திருப்பங்கள் நிறைந்த காலகட்டத்தில் வாழ்ந்த**வர் **.பால கங்காதர திலகர், உ .வேசாமிநாதையர் ., வசிதம்பரம் பிள்ளை .உ ., மகான் அரவிந்தர்** முதலியோர் இவரின் சமகாலத்தைய மனிதர்கள் ஆவர் இவர் **.விவேகானந்தரின் மாணவியான சகோதரி நிவேதிதையை தமது குருவாக கருதினார்.**


1912 **ஆம் ஆண்டு கீதையை தமிழில்** மொழிப்பெயர்த்தார் .**‘கண்ணன்பாட்டு’, ‘குயில்பாட்டு’, ‘பாஞ்சாலி சபதம்’, ‘புதிய ஆத்திச்சூடி’** போன்ற புகழ் பெற்ற காவியங்கள் பாரதியரால் எழுதப் பெற்றன. **‘மீசை கவிஞன்’** என்றும் **‘முண்டாசு கவிஞன்’** என்றும் தமிழ் இலக்கிய உலகம் போற்றும் பாரதியார், கவிதை எழுதுபவன் கவியன்றுகவிதையே வாழ்க்கையாக உடையோன் .,

“**வாழ்க்கையே கவிதையாகச் செய்தோன், அவனே கவி**..”.பாரதி **-**

“**நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்கு உழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல்**”**–** பாரதி



சுதந்திரப் போரில், பாரதியின் பாடல்கள் உணர்ச்சி வெள்ளமாய், காட்டுத்தீயாய், சுதந்திரக் கனலாய் தமிழ்நாட்டை வீருகொள்ளச் செய்தது பாரதியார் .**“இந்திய பத்திரிக்கையின்”** மூலம் மக்களிடையே விடுதலை உணர்வை தூண்டும் வகையில் பல எழுச்சியூட்டும் கட்டுரைகளை எழுதினார்பாரதியின் எழுச்சிக்கு ., தமிழ்நாட்டில் பலத்த ஆதரவு பெருகுவதைக் கண்ட பிரிட்டிஷ் ஆட்சி “இந்தியா பத்திரிக்கைக்கு” **தடை விதித்து அவரை கைது செய்து சிறையிலும் அடைத்தது.** இவர் **சுதேசிமித்திரனில் உதவி ஆசிரியராக, நவம்பர் 1904 முதல் ஆகஸ்ட் 1906 வரை பணி**யாற்றினார் . **“ஆடுவோமே பள்ளு பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம்”** என்று **சுதந்திரம் அடைவதற்கு முன்பே தன்னுடைய சுதந்திர தாகத்தை தன் பாட்டின் மூலம்** வெளிபடுத்தியவர், மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.




1921 **ஆம் ஆண்டு ஜூலை மாதம் திருவல்லிகேணியில் உள்ள பார்த்தசாரதி கோவிலுக்கு** சென்றபோது, எதிர்பாராவிதமாக அந்த கோவில் **யானையால் தூக்கி எறியப்பட்டதால் பலத்த காயமுற்று மிகவும் நோய்வாய்ப்பட்டார் .** பிறகு, 1921 **செப்டம்பர் 11ம் தேதி, தனது 39 ஆவது வயதில் இவ்வுலக வாழ்விலிருந்து விடுதலைப் பெற்றார். எட்டயபுரத்திலும், சென்னையில் உள்ள திருவல்லிக்கேணியிலும் பாரதியார் வாழ்ந்த இடத்தை பாரதியாரின் நினைவு இல்லமாக தமிழ்நாடு அரசு மாற்றி இன்று வரை பொதுமக்களின் பார்வைக்காக பராமரித்து** வருகிறது இவர் பிறந்த **.எட்டயபுரத்தில்**, பாரதியின் நினைவாக **மணிமண்டபமும்** அமைக்கப்பட்டு இவருடைய **திருவுருவச் சிலை**யும் வைக்கப்பட்டுள்ளது . **பாரதியின் வாழ்க்கை வரலாறு தொடர்பான புகைப்படக் கண்காட்சியும், இவருடைய திருவுருவச் சிலையும், இவரின் நினைவை போற்றும் வகையில்** அமைக்கப்பட்டுள்ளது. பாரதியை மக்கள், **‘கவி’, ‘மானுடம் பாடவந்த மாகவி’, ‘புது நெறி காட்டிய புலவன்’, எண்ணத்தாலும் எழுத்தாலும் இந்திய சிந்தனைக்கு வளம் சேர்த்தவர்’, ‘பல்துறை அறிஞர்’, ‘புதிய தமிழகத்தை உருவாக்க கனவுகண்ட கவிக்குயில்’, ‘தமிழின் கவிதை’ மற்றும் உரைநடையில் தன்னிகரற்ற புலமை பெற்ற பேரறிவாளர்,** என்றெல்லாம் புகழ்கின்றனர்.



## (அ) குயிற்பாட்டு

குயிற்பாட்டு, பாரதி பாடிய குறுங்காவியங்களுள் ஒன்று. அது **மானுடரையும் விலங்குகளையும்** வைத்து, **புனையப்பட்ட வேடிக்கையான கற்பனைக் கதை**. மாஞ்சோலை ஒன்றிலிருந்த **குயிலொன்று பாடிய இன்னிசை கீதத்தில்**, தன் மனதைப் பறிகொடுத்த கவிஞர், அது கூறிய **காதற்கதையினை செவிமடுக்கிறார்**. அச்சந்தர்ப்பத்தில் **குயில் இயற்கையின் கீதங்களிலும், பெண்கள் இசைக்கும் இனிமையான கீதங்கள், நாட்டார் பாடலிசையிலும் கருவிகளின் இன்னோசையிலும் மனதைப் பறிகொடுத்தமை** பற்றி எடுத்துரைக்கும் பகுதியே இங்கு இடம்பெற்றுள்ளது. எனினும் பாரதி அதனுள்ளே பல விடயங்களைக் கூற முனைந்துள்ளார். இக்குறுங்காவியத்தை முடிக்கும்போது,

"ஆன்ற தமிழ்ப் புலவீர் கற்பனையேயானாலும்
வேதாந்தமாக விரித்துப் பொருளுரைக்க
யாதேனுஞ் சற்றே இடமிருந்தால் கூறீரோ"




எனக்கேட்டு, சிந்தனையைத் தூண்டி விடுகின்றார். அத்தகைய குயிற்பாட்டு எனும் குறுங்காவியத்தில் **பிரதானமான பாத்திரமான குயில்**, இசைமேலான தன் ஈடுபாடு பற்றி கதை சொல்லியை நோக்கிக் கூறும் பகுதி இங்கு தரப்பட்டுள்ளது. பாரதியின் முப்பெரும் கவிதைகளுல் ஒன்றாக அமையும் **குயிற் பாட்டு 1912** ஆம் ஆண்டு இயற்றப்பட்டவை. ஒன்பது சிறு பிரிவுகளைக் கொண்டது, 262 அடிகளால் ஆனது. இங்கு **குயிற்பாட்டின் இரண்டாம் பகுதியான "குயிலின் கதை" யில் 28 - 46 பாடல்** வரையான பகுதியே பாடப்பரப்பில் இடம்பெறுகின்றது.

கானப் பறவை கலகலெனு மோசையிலும்,
காற்று மரங்களிடைக் காட்டு மிசைகளிலும்,
ஆற்றுநீ ரோசை அருவி யொலியினிலும்,
நீலப் பெருங்கடலெந் நேரமுமே தானிசைக்கும்

ஓலத் திடையே யுதிக்கு மிசையினிலும்,
மானுடப் பெண்கள் வளருமொரு காதலினால்
ஊனுருகப் பாடுவதி லூறிடுந்தேன் வாரியிலும்,
ஏற்றநீர்ப் பாட்டி னிசையினிலும், நெல்லிடிக்குங்

கோற்றொடியார் குக்குவெனக் கொஞ்சு மொலியினிலும்
சுண்ணமிடிப் பார்தஞ் சுவைமிகுந்த பண்களிலும்,
பண்ணை மடவார் பழகுபல பாட்டினிலும்
வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்கக்
கொட்டி யிசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்,

வேயின் குழலோடு வீணைமுத லாமனிதர்
வாயினிலுங் கையாலும் வாசிக்கும் பல்கருவி

நாட்டினிலுங் காட்டினிலும் நாளெல்லாம் நன்றொலிக்கும்

பாட்டினிலும் நெஞ்சைப் பறிகொடுத்தேன் பாவியேன்.

<u>நாவும் மொழிய நடுக்கமுறும் வார்த்தைகளைப்</u>

<u>பாவி மனந் தானிறுகப் பற்றிநிற்ப தென்னேயோ?</u>

**வெளிப்படும் வாழ்வியல் அம்சங்கள்**

- ஏற்றம் இறைத்தல்
- நெல்லிடித்தல்
- சுண்ணமிடித்தல்
- கும்மி கொட்டுதல்
- வயற்றொழில்
- இசைக் கருவிகள் பயன்படுத்தல்

## குயிற்பாட்டு எனும் கவிதைப் பகுதியில் வினாவப்படக்கூடிய வினாக்கள்.

1. பாரதியார் இலக்கியப்பணி பற்றி சிறுகுறிப்பு வரைக.
2. குயிற்பாட்டு பற்றி விபரிக்குக.
3. பாரதியார் கண்ட குயிலை மயக்கச் செய்த இசையெலிவகைகள் எவை?
4. பாரதியாரின் குயிற்பாட்டில் காணப்படும் கவிதைச் சிறப்புக்கள் யாவை?
5. குயிற்பாட்டு பகுதியில் வெளிப்படும் அம்சங்களை தருக.
6. “நாவும் மொழிய நடுக்கமுறும் வார்த்தைகளைப்
   பாவி மனந் தானிறுகப் பற்றிநிற்ப தென்னேயோ?..” எனும்வரிகள் உணர்த்துவது பற்றி விளக்குக.

## (ஆ) கண்ணம்மா என் காதலி



**கண்ணனைப் பல நிலைகளில் பாவனை** செய்து பாரதியால் பாடப்பட்ட பல பாடல்கள் காணப்படுகின்றன. அவை **கண்ணன் பாடல்கள்** எனப் பெயர் சூட்டப் பெறுகின்றன. **கண்ணனை காதலியாகப் பாவனைசெய்து பாடிய பாடல்களுள் ஒன்றாக, “கண்ணம்மா என் காதலி”** அமைகிறது. முப்பெரும் கவிதைகளுள் ஒன்றாக அமையும் **“கண்ணன் பாட்டு”** தொகுதியில் **23 தலைப்பு**க்களிலான பாடல்கள் உள்ளன. **கண்ணன் மீது அதீத பக்தி** கொண்ட பாரதியார் கண்ணனைத் **தோழனாக, தாயாக, தந்தையாக, சேவகனாக, அரசனாக, சீடனாக, சற்குருவாக, கண்ணம்மா எனும் குழந்தையாக, விளையாட்டுப் பிள்ளையாக, காதலனாக, காந்தனாக, கண்ணம்மா எனும் காதலியாக, ஆண்டவனாக, குலதெய்வமாக** பல்வேறு உறவுகளில் கற்பனை செய்து பாடியுள்ளார்.

**“கண்ணன் என் காதலன்”, “கண்ணம்மா என் காதலி”** எனும் தலைப்பில் அமையும் பாடல்கள் சிறப்பானவையாகும் அதில் “கண்ணம்மா என் காதலி” எனும் தலைப்பில் அமைந்த பாடல் எமது பாடப்பரப்பில் இடம்பெறுகின்றது. **பின்னே வந்து கண் மறைக்கும் காதலின் செயல்களை முன்நிறுத்தி சிருங்காரரசத்தில்** இது பாடப்பட்டுள்ளது. **பெரியாழ்வார், குலசேகர ஆழ்வார், ஆண்டாள்** போன்றவர்கள் கண்ணனை உறவாக வைத்து பாடிய வரிசையில் பாரதியும் இணைகிறார். **கண்ணன் மீதான காதல் உணர்வை கண்ணம்மா மீது ஏற்றி இயற்கையின் வனப்புக்களில் அமைத்துப்** பாடுகிறார்.



**இயற்கை முழுவதிலும் இறைவனைக் கண்ட அனுபவத்தின் வெளிப்பாடாக** இக்கவிதை அமைகிறது. **<u>பாரதி மாலை நேரமொன்றில் கடற்கரையில் வானத்தினதும் கடலினதும் அழகை இரசித்து தன்னை மறந்திருந்த நிலையில் காதலியாகிய கண்ணம்மா பின்புறமாக வந்து அவரது கண்ணைத் தனது கைகளால் மூடியவுடன், மூடியவர் யாரென இனங்கண்ட பாரதி கையை விலக்கி அவளோடு உரையாடும் வேளையில் கண்ணம்மா இயற்கைக் கூறுகளில் நீ என்ன கண்டாய்? என வினவுவதாகவும் அதற்குப் பாரதி, அனைத்தினும் உன் முகமே கண்டேன் என விடையளிப்பதாகவும்</u>** இக்கவிதை அமைந்துள்ளது.

1. மாலைப் பொழுதிலொரு மேடைமிசையே
வானையும் கடலையும் நோக்கியிருந்தேன்
மூலைக் கடலினையவ் வானவளையம்
முத்தமிட் டேதழுவி முகிழ்தல்கண்டேன்
நீல நெருக்கிடையில் நெஞ்சுசெலுத்தி,
நேரங் கழிவதிலும் நினைப்பின்றியே
சாலப் பலபலநற் பகற்கனவில்
தன்னை மறந்தலயந் தன்னிலிருந்தேன்.

2. ஆங்கப் பொழுதிலென் பின்புறத்திலே,
ஆள்வந்து நின்றெனது கண்மறைக்கவே,
பூங்கினிற் கையிரண்டுந் தீண்டியறிந்தேன்
பட்டுடை விசுகமழ் தன்னிலறிந்தேன்
ஓங்கி வரு முவகை யூற்றி லறிந்தேன்
ஒட்டு மிரண்டுள்ளத்தின் தட்டி லறிந்தேன்
'வாங்கி விடடி கையை யேடி கண்ணம்மா,
மாய மெவரிடத்தில்?' என்று மொழிந்தேன்.

3. சிரித்த ஒலியி லவள் கை விலக்கியே,
திருமித் தழுவி, 'என்ன செய்தி சொல்' லென்றேன்,
'நெரித்த திரைக்கடலில் என்ன கண்டிட்டாய்?
நீல விசும்பினிடை என்ன கண்டிட்டாய்?
திரித்த நுரையினிடை என்ன கண்டிட்டாய்?
சின்னக் குமிழிகளில் என்ன கண்டிட்டாய்?
பிரித்துப் பிரித்துநித மேக மளந்தே,
பெற்ற நலங்க ளென்ன? பேசுதி' என்றாள்.

4. ‘நெரித்த திரைக்கடலில் நின்முகங் கண்டேன்
நீல விசும்பினிடை நின்முகங் கண்டேன்
திரிதத் நுரையினிடை நின்முகங் கண்டேன்
சின்னக் குமிழிகளில் நின்முகங் கண்டேன்
பிரித்துப் பிரித்துநித மேக மளந்தே,
பெற்றதுன் முகமன்றிப் பிறிதொன்றில்லை
சிரித்த ஒலியினிலுன் கை விலக்கியே,
திருமித் தழுவியதில் நின்முகங் கண்டேன்.

**கண்ணம்மா என் காதலி எனும் கவிதைப் பகுதியில் வினாவப்படக்கூடிய வினாக்கள்.**

1. இக் கவிதையை எவ்வாறான பாவனையில் பாரதி பாடுகிறார்?
2. கண்ணம்மா என் காதலி எனும் கவிதை பற்றி சிறுகுறிப்பு வரைக.
3. எவ்வாறான காட்சியில் பாரதி தன்னை மறந்திருந்ததாக பாடுகிறார்?
4. கண்ணம்மாவை எவற்றைக் கொண்டு தான் அறிந்துகொண்டதாக பாரதி பாடுகிறார்?
5. பாரதியிடம் கண்ணம்மா எவற்றை வினாவுவதாக கவிதை பாடுகிறது?
6. எவற்றை தான் பார்த்ததாக பாரதி கண்ணம்மாவுக்கு கூறுகிறார்?
7. இக்கவிதையில் வெளிப்படும் பாரதியின் கவிப்புலமை பற்றி கருத்துரைக்க.



### (இ) பாஞ்சாலி சபதம்

**மகாபாரதத்தில் தருமன், கௌரவர்களுடன் சூதாடி நாடு நகர் எல்லாம் இழந்து, இறுதியில் பாஞ்சாலியையும் பணயம் வைத்து இழக்கிறான்.** பாஞ்சாலி **துரியோதனன் சபையிலே** அவனால் **மானபங்கப்படுத்தப்படுகிறாள்.** ஆந்நிலையில் பாஞ்சாலி தர்மாவேசத்தோடு **துரியோதனை அழித்தே தன் குழல் முடிப்பதாகச் சபதம்** செய்கிறாள். அச்சபத நிகழ்ச்சியை மையமாகக்கொண்டு மகாபாரதக் கதைப் பகுதியை பாரதி, புதுமைகளோடு குறுங்காவியமாக, **‘பாஞ்சாலி சபதம்’** என்ற பெயரில் படைத்துள்ளார். **துரியோதனனோடு சூதாடிய தருமன், தேசத்தைப் பணயப் பொருளாக வைத்தது கண்டு கொதித்தெழுந்து கூறுவதாக அமைவது இப்பகுதி**.

**சூது மீட்டும் தொடங்குதல்**

காயு ருட்ட லானார் - சூதுக்
களிதொ டங்க லானார்
மாய முள்ள சகுனி - பின்னும்
வார்த்தை சொல்லு கின்றான்:
“நீய ழித்த தெல்லாம் - பின்னும்
நின்னி டத்து மீளும்,

ஓய்வ டைந்தி டாதே, - தருமா!

ஊக்க மெய்து'' கென்றான்.

கோயிற் பூசை செய்வோர் - சிலையைக்

கொண்டு விற்றல் போலும்,

வாயில் காத்து நிற்போன் - வீட்டை

வைத்தி ழத்தல் போலும்,

ஆயி ரங்க ளான - நீதி

யவையு ணர்ந்த தருமன்

தேயம் வைததி ழந்தான்: - சீச்சீ

சிறியர் செய்கை செய்தான்.

'நாட்டு மாந்த ரெல்லாம் - தம்போல்

நரர்க ளென்று கருதார்:

ஆட்டு மந்தை யாமென் - றுலகை

அரச ரெண்ணி விட்டார்.

காட்டு முண்மை நூல்கள் - பலதாங்

காட்டி னார்க ளேனும்

நாட்டு ராஜ நீதி - மனிதர்

நன்கு செய்ய வில்லை.

ஓரஞ் செய்தி டாமே, - தருமத்

துறுதி கொன்றி டாமே,

சோரஞ் டிசய்திடாமே, -பிறரைத்

துயரில் வீழ்த்தி டாமே,

ஊரை யாளு முறைமை - உலகில்

ஓர்பு றத்து மில்லை.

சார மற்ற வார்த்தை! - மேலே

சரிதை சொல்லு கின்றோம்.

**சூதின் இழிவு** :

- வஞ்சகரின் மாயவலையில் வீழ்த்தும்
- அறிவிழக்கச் செய்யும்
- பழியை ஏற்படுததும்
- தன்னையும் தன்னைச் சார்ந்தவரையும் துன்பத்திலாழ்த்தும்

**தருமன் அடைந்த இழிவு:**

- ஆயிரம் நீதி நூல்களைக் கற்றிருந்தும் தேசத்தைப் பணயம் வைத்து இழந்ததாலே, "சீச்சீ" எனத் தூற்றுமளவுக்கு தருமன் கீழ்நிலை அடைதல்.
- தருமன் சிறியாருள் ஒருவனாகக் கணிக்கப் பெறல்.
- நாட்டு மக்களை மந்தைகளாய் மன்னர்கள் கருதுகிறார்கள் எனக் கூறும் நிலை ஏற்படல்.

**சிறந்த ஆட்சித்தலைவனுடைய இலட்சணங்கள்:**

- நாட்டு மக்களை மதித்துப் போற்றல்.
- நூல்களைக் கற்பது மட்டுமன்றி அவற்றை மக்கள் நலனுக்காய் பின்பற்றுதல்.
- வஞ்சனை புரியாது நடத்தல்.
- அறத்தினின்றும் மனவுறுதி தளராது இருத்தல்.
- கீழ்நிலை அடையக்கூடிய செயல் புரியாமை.
- பிறரைத் துயரில் வீழ்த்தாமை.

**சகுனியின் வஞ்சனை:**

- சூழ்ச்சிகள் நிறைந்தவனாகக் காணப்படல்.
- 'நீ இழந்தவற்றையெல்லாம் மீளப் பெறுவாய்' என தருமனை வஞ்சித்து ஊக்குவித்தல்.

**கவிதை வலியுறுத்தும் விடயங்கள்:**

- முறை தவறும் அரசின் மீதான வெறுப்பு.
- மக்களை மதித்து மக்களது நலன் நாடும் தன்னலமற்ற அரசின் மீதான அவா.
- தன்னலமற்ற மக்கள் நலனைக் கருத்திற் கொண்ட அரசுகள் உலகில் எங்கும் இல்லையே என்ற ஆதங்கம்.



***<u>பாஞ்சாலி சபதம் எனும் கவிதைப் பகுதியில் வினாவப்படக்கூடிய வினாக்கள்.</u>***

1. பாஞ்சாலி சபதம் பற்றி சிறுகுறிப்பு வரைக.
2. தருமனை எவ்வாறான விடயங்களைக் கூறி சகுனி சூதாட ஊக்கப்படுத்தினான்?
3. தருமன் எவ்வாறான இழிவுச் செயலை செய்ததாக கவிதையூடாக பாரதி பாடுகிறார்?
4. எவற்றை உலகையாளும் அரசர்கள் மறந்து செயற்படுவதாக கவிதை பாடுகிறது?
5. எவ்வாறானதொரு ஆட்சி முறை உலகில் இல்லை என பாரதி பாடுகிறார்?
6. இக்கவிதையூடாக வெளிப்படும் சூதின் இழிவு பற்றி கருத்துரைக்குக.
7. இக்கவிதையூடாக வலியுறுத்தப்படும் சிறந்த ஆட்சித்தலைவனுடைய இலட்சணங்கள் எவை?
8. இக்கவிதையூடாக வெளிப்படும் சகுனியின் வஞ்சனைக் குணம் பற்றி விளக்குக.
9. இக்கவிதையூடாக வலியுறுத்தப்படும் விடயங்கள் எவை?
10. இக்கவிதையில் பாரதி பயன்படுத்தியுள்ள அணிகளை சுட்டிக்காட்டி விளக்குக.
11. இக்கவிதையூடாக வெளிப்படும் பாரதியின் மொழிநடைச் சிறப்புக்களை விளக்குக.

## (ஈ) பெண் விடுதலை



**தேசிய விடுதலை, பெண் சமத்துவம்** என்பவற்றில் தீவிர ஈடுபாடுகாட்டிய பாரதி **சீனமொழியில் "சீயூசன்"** என்பவர் பாடிய கவிதையை **மொழிபெயரத்து**ப் பாடியதே **பெண் விடுதலை** எனும் இக்கவிதை.

**ஆணும் பெண்ணும் சமமானவர்கள். பெண்களை ஆண்கள் அடக்கி ஆள்வது பொருத்தமற்றது. பெண்கள் தம் பெருமை உணர்ந்து ஒன்றுபட்டு விடுதலை பெற முயல வேண்டும்** என்ற கருத்தை வலியுறுத்தும் வகையில் இக்கவிதை அமைந்துள்ளது. **பெண்கள் விடுதலை பெற்று தேசத்தின் விடுதலைக்காக ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்** என்ற கருத்தை வலியுறுத்துவதாக இக்கவிதை அமைந்துள்ளது.

- ஆணும் பெண்ணும் சமமானவர்களாகவே படைக்கப்பட்டார்கள்.
- பெண் ஆணுக்குச் சரிநிகர் உரிமை பெற்றவள்.
- இடைக்காலத்திலேயே ஆண் உயர்ந்தவன், பெண் தாழ்ந்தவள் என்ற கீழ்நிலை உண்டானது.
- பெண் தனக்கு நேர்ந்த இழிநிலையைப் போக்க போராடும் வல்லமை உள்ளவள்.
- பெண்ணின் இழிநிலையைப் போக்க உறுதிகொண்டு உழைப்போம்.
- ஆண்கள், பெண்களைச் சமமாக நடத்துவார்களாயின் அவர்களோடு தேசத்தின் விடுதலைக்காக ஒன்றுபட்டு உழைப்போம்.
- இழிநிலையைப் போக்க உறுதிகொண்டு உழைப்போம்.

1. விடுத லைக்கு மகளிரெல் லோரும்
வேட்கை கொண்டனம்: வெல்லுவ மென்றே
திடம னத்தின் மதுக்கிண்ண மீது
சேர்ந்து நாம்பிர திக்கினை செய்வோம்.
உடைய வள் சக்தி ஆண்பெண் ணிரண்டும்
ஒருநி கர்செய் துரிமை சமைத்தாள்:
இடையி லேபட்ட கீழ்நிலை கண்டீர்,
இதற்கு நாமொருப் பட்டிருப் போமோ?

2. திறமையா லிங்கு மேனிலை சேர்வோம்:
தீய பண்டை யிகழ்ச்சிகள் தேய்ப்போம்:
குறைவி லாது முழுநிகர் நம்மைக்
கொள்வ ராண்க ளெனில வரோடும்
சிறுமை தீரநந் தாய்த்திரு நாட்டைத்
திரும்ப வெல்வதிற் சேர்ந்திங் குழைப்போம்:
அறவி ழுந்தது பண்டை வழக்கம்:
ஆணுக் குப்பெண் விலங்கெனு ம.்.தே.

3. விடியு நல்லொளி காணுதி நின்றே,

மேவு நாக ரிகம்புதி தொன்றே

கொடியர் நம்மை யடிமைக ளென்றே

கொண்டு தாம்முத லென்றன ரன்றே.

அடியொ டந்த வழக்கத்தைக் கொன்றே

அறிவு யாவும் பயிற்சியில் வென்றே

கடமை செய்வீர், நந் தேசத்து வீரக்

காரி கைக்கணத் தீர், துணி வுற்றே.

## ***பெண் விடுதலை எனும் கவிதைப் பகுதியில் வினாவப்படக்கூடிய வினாக்கள்.***

1. பெண்விடுதலை கவிதை பற்றி சிறுகுறிப்பு வரைக.
2. இக் கவிதை எதனை மையக்கருவாகக் கொண்டு பாடப்பட்டுள்ளது?
3. இக் கவிதையில் பாரதி வலியுறுத்திக்கூறும் பெண்களுக்கான உரிமைகள் எவை?
4. பெண்கள் எவற்றுக்காக உறுதிமொழி எடுக்க வேண்டும் என பாரதி பாடுகிறார்?
5. பெண்கள் எதற்காக, எவ்வாறு உழைக்கவேண்டும் என பாரதி பாடுகிறார்?
6. பெண் விடுதலைக்காக எவ்வாறு பாரதி விழிப்புணர்வுக் கருத்துக்களை பகிர்கிறார்?
7. இக் கவிதையில் காணப்படும் சிறப்பியல்புகளை விளக்குக.